# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க,
# மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஜூலை மாதம் 6 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1990 ஜூலை மாதம் 6 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 — தபாற் செலவு : ரூபா 1.00

# 1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம்

[1990 ஜூலை மாதம் 06 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 33/90
2069

## 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயர்.**

(1) இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) மாகாணம் ஒன்றின் ஆளுநரின் தகவலொன்றில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று, ஆளுநரின் அபிப்பிராயப்படி மாகாண சபையின் உறுப்பினர் ஒருவர் 4 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய உறுப்பினரால் விடயத்திற்கேற்ப எடுத்தோதப்பட்ட அல்லது செய்யப்பட்ட சத்தியத்துக்கு அல்லது உறுதியுரைக்கு முரணான அல்லது அதனை மீறுகின்ற முறையில் அரசியலமைப்புக்குக் கீழ்ப்படியாது வெளிப்படையாக மறுதலித்துள்ளாரென அல்லது வெளிப்படையாக ஒப்புக் கொள்ள மறுத்துள்ளாரென அத்தகைய ஆளுநர் அம்மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மாகாண சபையின் தவிசாளருக்குத் தகவல் கொடுக்குமிடத்து, அத்தகைய தகவலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய உறுப்பினர் அத்தகைய மாகாண சபையின் உறுப்பினரொருவராக அமர்வதிலிருந்தும் வாக்களிப்பதிலிருந்தும் தகைமை இழந்தவராதல் வேண்டும்".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துதல்.**

3. ஐந்தாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"மாகாண சபையொன்றைக் கலைத்தல்

5அ. மாகாணமொன்றில் ஆளுநர் ஒருவர்—

(அ) அத்தகவலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அத்தேதியளவில் அத்தகைய மாகாண சபையின் மொத்த உறுப்பாண்மையில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிவதற்குத் திட்டவட்டமாக மறுத்துள்ளார்கள் அல்லது கீழ்ப்படிய வெளிப்படையாக மறுத்துள்ளார்கள் அல்லது விடயத்துக்கு ஏற்றவாறு 4 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய உறுப்பினர்களால் எடுக்கப்பட்டு ஒப்பமிடப்பட்ட

ல 009190—1,575 (06/90)

அல்லது செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்ட சத்தியத்தை அல்லது உறுதியுரையை மீறும் வகையில் வேறு விதமாகச் செயல்பட்டிருக்கிறார்கள் எனச் சனாதிபதிக்குத் தகவல் கொடுக்குமிடத்து; அல்லது

(ஆ) ஏதாவது தேதியிலிருந்து அத்தகைய மாகாண சபையானது எல்லா நோக்கங்களுக்காகவும் செயல்படாது ஒழிந்துவிட்டது எனச் சனாதிபதிக்குத் தகவல் கொடுக்குமிடத்து,

மாகாண சபையானது அத்தகைய தகவலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து கலைக்கப்பட்டுவிட்டதாதல் வேண்டும்."

இடைக்கால ஏற்பாடுகள்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவு நடைமுறையாவதன் காரணமாக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய தேதியொன்றிலிருந்து மாகாண சபையொன்று கலைக்கப்பட்டிருக்குமிடத்து, தேர்தல் ஆணையாளர் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள், அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலை வெளியிடுவாராயின் அவர், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

1992